# சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு கட்டாய, திருப்பி செலுத்தப்படாத அனைத்து கல்வி கட்டணங்களை வழங்கும் திட்டம் – திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை ( நிலை) எண் :16 நாள் : 24.2.2014

விஜய கார்த்திகை , திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது.

1) அரசாணை (நிலை) எண்.6, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 9.1.2012.
2) அரசாணை (நிலை) எண்.63, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 25.6.2012.
3) அரசாணை (நிலை) எண்.106, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 9.12.2013.
4) அரசாணை (நிலை) எண்.107, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 9.12.2013.

------

ஆணை :-

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் உட்பட) அனைத்துவிதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டாயக் கட்டணங்களையும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு "அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு" நிர்ணயித்த கட்டணம் அனைத்தையும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் 2011–2012ஆம் கல்வி ஆண்டிலிருந்து வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச/கட்டண இருக்கைகளில் பயிலும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ/ மாணவியர்களுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு. "அரசு நியமித்த சுயநிதி கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் 2012–2013ஆம் கல்வி ஆண்டிலிருந்து வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

3. சில சுயநிதி பொறியியல் கல்வி நிறுவனங்கள் ஒற்றைச் சாளர முறையில் அரசு ஒதுக்கீட்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மற்றும் பிற இனங்களுக்குரிய, நிரப்பப்படாத இடங்களை மீண்டும் கல்வி நிறுவனங்களுக்கே திருப்பியளிக்கப்படுவதன் காரணமாக பெறப்படும் இடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இன மாணவ மாணவிகளுக்கான கல்வி உதவித் தொகையை பெறும் நோக்குடன் ஆதிதிராவிடர் இன மாணவர்களைக் கொண்டே தனது கல்லூரியிலுள்ள நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களில் சேர்க்கை அனுமதித்திருப்பது அரசால் அறியப்பட்டது.

4. இதனை சீரமைக்கும் முயற்சியாக, அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு "அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு" நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் "தனியார் கல்லூரிகளுக்கான அனுமதிக்கப்படும் இலவச இருக்கைகளுக்கான கட்டணத் தொகைக்கு மிகாமல் வழங்கப்படுமென பார்வை 3 மற்றும் 4ல் காணும் அரசாணைகளில் அரசு ஆணையிட்டது.

5. பார்வை 3 மற்றும் 4 ல் காணும் அரசாணைகளினால், ஏற்கனவே கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ள மாணாக்கர்களுக்கு பாதகமாக அமையும் என்று மாணாக்கர்களிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், அதிக எண்ணிக்கையிலான ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட இன மாணவ மாணவியர்கள் அவர்கள் விரும்பும் பாடப்பிரிவில் சேர்ந்து பயின்று தொழில்நுட்ப வல்லுநர்களாக உருவாக வேண்டும் என்ற நோக்கத்துடனும், முறைகேடுகளில் ஈடுபடும் நிறுவனங்கள் மீது தனியே நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பதன் அடிப்படையிலும், இவ்வரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.

I. சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் உட்பட) அனைத்துவிதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியின, மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிட இன மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டாயக் கட்டணங்களையும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு "அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு" நிர்ணயித்த கட்டணம் அனைத்தையும் மைய / மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் 2013– 14 கல்வியாண்டு முதல் அரசே வழங்கும்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.10750/ஆதி(ம)பந/2014 நாள்.24.02.2014 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கண்ணகி பாக்கியநாதன்,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
ஆணையர், தொழில்நுட்ப கல்வி, சென்னை–25.
இயக்குநர், மருத்துவக் கல்வி, சென்னை–10.
இயக்குநர், சட்ட கல்வி , சென்னை–35.
இயக்குநர், கல்லூரிக்கல்வி சென்னை–6.
முதன்மைச் செயலாளர்,
உயர்கல்வித்துறை/ மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை /சட்டத்துறை
தலைமைச் செயலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்.

மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8/35/6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
<u>நகல்:–</u>
நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது–II) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், பொறியியல் மாணவர் சேர்க்கை,
அண்ணா பல்கலைக்கழகம் சென்னை–25.
தேர்வுக்குழு, மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை–10.
அனைத்து சுயநிதி பொறியியல் கல்லூரிகள்,
(தொழிற்நுட்ப கல்வி ஆணையர் சென்னை–25. வழியாக),
அனைத்து சுயநிதி மருத்துவ கல்லூரிகள் (மருத்துவ கல்வி இயக்குநர், சென்னை–10 வழியாக)
அனைத்து சுயநிதி சட்டக்கல்லூரிகள் (சட்டகல்வி இயக்குநர், சென்னை–35 வழியாக)
அனைத்து சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்
(கல்லூரி கல்விக் இயக்குநர், சென்னை–6 வழியாக)
அனைத்து கல்வியியல் கல்லூரிகள் (கல்லூரி கல்விக் இயக்குநர், சென்னை–6 வழியாக)
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர். 24/2/2014